29.01.2026
MCOP.10/2024
<u>ம.சா.1. எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

நான் யாருக்காக நஷ்டஈடு தொகை கேட்டு மனு கொடுத்துள்ளேன் என்றால் என் மகனுக்காக. எனது மகன் பாலகுமரன். இந்த விபத்து 13.01.2017-ல் நடந்தது என்றால் சரிதான். எனது மகனுக்கு திருமணம் ஆகவில்லை. 10 வகுப்பு வரை படித்துள்ளார். விபத்துக்குள்ளான தேதியில் எனது மகனுக்கு என்ன வயது இருக்குமென்றால் 22 வயது. எனது மகன் என்ன வேலை பார்தார் என்றால் திருப்பூரில் உள்ள கம்பெனியில் வேலை பார்த்தார். எனது மகன் திருப்பூரில் வேலைப்பார்த்து வந்தற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. சொல்லிதான் பார்த்தேன். எத்தனை மணிக்கு விபத்து நடந்தது என்றால் மதியம் 12 மணிக்கு. நான் மாலை 06.00 மணிக்குதான் காவல்நிலையத்தில் புகார்க்கொடுத்தேன் என்றால் சரிதான். நான் சொன்னா தகவலின் அடிப்படையில் தான் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். எனது மகன் அவருக்கு சொந்தமான இருசக்கர மோட்டார் சைக்கிளில் தான் சென்றார். எனது மகனுக்கு வண்டி ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம், இன்சூரன்ஸ் பாலிசி இருந்தாத என்றால் இருந்தது. நான் தாக்கல் செய்துள்ள இம்மனுவில் எனது மகன் காப்பீடு செய்துள்ள நிறுவனத்தை இந்த

வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் நான் மட்டும் தான் இறந்துபோன எனது மகனுக்கு வாரிசு என்றும், 2ம் மனுதாரர் வாரிசாக வரமாட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.16 ஆவணத்தில் இறந்து போன பாலகுமரன் என்பவருக்கு நான் மட்டும் தான் வாரிசு என வட்டாசியரால் வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். விபத்து ஏற்பட்ட சமயத்தில் எனது மகனுக்கு இடுப்பு, மற்றும் இடது கையில் பலத்த காயம் ஏற்பட்டதாக புகைப்படம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். அறுவைசிகிச்கை செய்து எனது மகனின் கை அகற்றப்பட்டுவிட்டது. எனது மகன் விபத்து ஏற்பட்டு 879 நாட்கள் படுத்தபடுக்கையாக இருந்து , கடந்து 10.06.2019–ல் தான் இறந்து விட்டார் என்றால் சரிதான். இறந்த பொழுது எனது மகன் வீட்டில் இருந்தாரா என்றால் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்தார். எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டது குறித்து காவல் நிலையத்தில் விபத்து வழக்கு தான் பதிவு செய்யப்பட்டது. பின்னிட்டு எனது மகன் விபத்து காரணமாக தான் இறந்தார் என காவல்துறையில் முதல் தகவல் அறிக்கையில் சட்டப்பிரிவு  மாற்றம் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனது மகன் விபத்தினால் தான் இறந்தார் என போஸ்ட்மாரடம் அறிக்கையில் மருத்துவர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.  இந்த விபத்திற்கு எனது மகன் தான் காரணம் என்றும், இறப்பிற்கு இந்த எதிர்மனுதாரர் நிறுவனம் காரணம் அல்ல என்றும், எனது மகனுக்கு

ஏற்பட்ட காயத்திற்கு மட்டும் இந்த எதிர்மனுதாரர் காரணம் என்றும், எனது மகனின் இன்சூரன்ஸ் நிறுவனத்தை இந்த வழக்கில் சேர்க்காதால் இம்மனு தள்ளுப்படி செய்யப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:-**</u>

எனது மகன் மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்ற பொழுது இறந்தார் என்றும், அது குறித்து மருத்துவர்களால் காவல் நிலையதிற்கு தகவல் தெரிவிக்க கடமைப்பட்டவர் என்றும், காவல் நிலையத்தில் அது குறித்து முதல் தகவல் அறிக்கையும் திருத்தம் செய்ய கடமைபபட்டவர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.